# எழுநிலம்

மாத இதழ் | மணம்- 1 | மே 2021 | திருவள்ளுவர் ஆண்டு 2052



## உலக உழைப்போர் நாள்



## முள்ளிவாய்க்கால் கஞ்சி




எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய் நுண்பொருள் காண்ப தறிவு

# எழுநிலம்

மாத இதழ்

மே 2021



தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com



**ஆசிரியர் பக்கம்**

## ஒன்றிணைவோம் – கட்டமைப்போம்

எமது தாயகத்தைப் பொறுத்தவரை, இனஅழிப்பு நடவடிக்கைகள், அதனால் விளைந்த அங்கவீனங்கள், இடப்பெயர்வுகள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், பெண்கள் மீதான திட்டமிட்ட வன்முறை மற்றும் உரிமை மீறல் என்பனவும் அதைத் தொடர்ந்த தொடர் அவலங்களும் சமூக பொரு ளாதார மற்றும் அரசியல் மாற்றங்களும் பெண்தலைமைத்துவ குடும்பங்க–ளின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரித்துச் செல்கிறது. அதேசமயம் கல்வித்தரம் குறைவடைந்து செல்கிறது. முன்னேறிச் செல்லும் உலக தொழில்மயமாக்கலுக்கும் தொ–ழில் நுட்ப வளர்ச்சிக்கும் முகம் கொடுத்து எமது தாயகத்தை வளர்த்தெடுக்க நாங்கள் ஒருமித்து கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. ஒன்றிணைவோம். எங்கள் தாயகத்தையும் அடுத்த தலைமுறையையும் கட்டமைப்போம்.




# திருக்குறள்



"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு"

உரை –

தான் சொல்லுவன எளிய பொருளையுடையன வாகப் பதியுமாறு சொல்லி, தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும்.



# உலக உழைப்போர் நாள்

~ இன்பா ~

**எமது தாயகத்தை வளர்த்தெடுக்க நாங்கள் ஒருமித்து கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. ஒன்றிணைவோம். எங்கள் தாயகத்தையும் அடுத்த தலைமுறையையும் கட்டமைப்போம்**

மே 1 உலக உழைப்பாளர் நாள். மேலாதிக்க, முதலாளி வர்க்கத்தின் நலன்களில் மட்டுமே குறியாகவிருந்த தலைமைகளிடமிருந்து தமக்குரிய அடிப்படை உரிமைகளை வெற்றிகொண்டதன் குறியீடாக உழைக்கும் வர்க்கத்தினால் கொண்டாடப்படும் ஒரு நாள். உலகமெங்கும், உழைத்துச் சோர்ந்து போனவர்களின் எழுச்சிப் பெருநாள் இந்நாள். இந்நாளை 66 நாடுகள் உத்தியோக பூர்வமாக விடுமுறை நாளாக அங்கீகரித்திருக்கின்றன.

மே 1 உழைப்பாளர் நாளாகி இன்றுடன் 127 ஆண்டுகளாகின்றன. பன்னெடுங்காலமாக, உழைப்போர் தமதுரிமைக்காக குரல் எழுப்பியிருந்த போதிலும் அவை எவையும் செவிசாய்க்கப்பட்டதுமில்லை, பிரச்சனைகள் தீர்க்கப்பட்டதுமில்லை. மே 1, 1889 அன்று 13,000 இற்கும் மேற்பட்ட பணியிடங்களில் இருந்து வெளியேறி, வேலைமறிப்புசெய்து, அமெரிக்காவின் சிக்காகோ நகர வீதிகளில் இறங்கிப் போராடிய 40,000 இற்கும் மேற்பட்ட தொழிலாளிகள் கூட்டம் உழைப்பாளிகளின் பலம் என்ன என்பதை உலகிற்கு காட்டிய ஆரம்ப நாளாகியது. மறுநாள் அந்தக் கூட்டம் கட்டுக்கடங்காமல் பெருகி 100,000 இனைத் தாண்டியது. “நாள் முழுவதும் வேலை செய்யும் நிலையை மாற்று, 8 மணிநேர வேலை கொடு” என்ற கோசம் முதலாளித்துவ ஆதிக்க சக்திகளை நடுநடுங்கச் செய்தது. போராட்டத்தை நசுக்க கங்கணம் கட்டினார்கள் அவர்கள். பிறிதொருநாளில், Hay Market சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதி ஊர்வலத்தில் முகம் தெரியாத ஒருவன் வீசிய குண்டு 7 காவல்துறையினரதும் 8 பொதுமக்களினதும் உயிரைக் குடிக்க கட்டுக்கடங்கா கலவரம் வெடித்தது.



அப்பாவிகளான 8 பேர் கைது செய்யப்பட்டனர். 7 பேருக்கு மரணதண்டனையும் ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனையுமாக ஒருதலைப்பட்சமாக நீதிபதி சொன்ன தீர்ப்பு உலகம் முழுவதிலுமிருந்த உழைப்பாளிகளிடையே எதிர்ப்பலைகளை ஏற்படுத்தின. உலகெங்கும் பரவலாக தொழிலாளர் போராட்டங்கள் அரங்கேறின. 8 மணிநேர கோரிக்கையில் உழைப்போர் வெற்றி கண்டனர். 1894ல் மே தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. இது வரலாறு.

கடந்த நூற்றாண்டில் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது? தொழிலாளர்களிற்கு பதிலாக இயந்திரங்

கள் அந்த வேலையைச் செய்யத் தொடங்கியிருக்கின்றன. இருப்பினும் ஃப்ரே மற்றும் ரஹ்பரி 2016 ஆய்வின்படி, சமநிலையில், தொழில்நுட்பம் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது.

தொழில்நுட்ப முன்னேற்றம் வாழ்க்கைத்தரத்தை மாற்றியுள்ளது. ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. அடிப்படை சுகாதாரம், கல்வி பரவலாக்கப்பட்டு-ள்ளது. பெரும்பாலான உழைப்பாளிகள் தங்கள் வருமானம் அதிகரித்திருப்பதை உணர்கிறார்கள். இவை அனைத்தும் உண்மைதான் என்றபோதிலும் வெளியே பிரதிபலிக்கின்ற இந்த வளர்ச்சி போன்ற தோற்றப்பாடு முதலாளித்துவ வர்க்கத்தைத் திருப்திப்படுத்துவதாகவே உள்ளது.

முதலாளி வர்க்கம் அதிதிறன் வாய்ந்த தொழில்நுட்ப செயற்பாடுகளை உள்வாங்கி, பாரிய சந்தைப்படுத்தல்களை மேற்கொண்டு இலாபங்களைக் குவித்து சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள். அந்த வாழ்க்கை தொடர வேண்டுமானால், மேலும் மேலும் அதிக இலாபம் குவிக்க வேண்டுமானால், உழைப்பாளிகள் அதற்கு ஈடுகொடுக்கும் உடல்நிலையில் இருக்க வேண்டியது அவசியம் என்ற எண்ணப்பாட்டின் வெளிப்பாடுதான் உழைப்பாளிகள் வாழ்வில் ஒரு சிறிய ஏற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. முதலாளிக-ளினதும் நாட்டினதும் பொருளாதார நிலையை உச்ச-த்திற்கு கொண்டுபோக இரவும் பகலும் மாடாய் உழை-த்து ஓடாய் தேய்ந்துபோகும் இந்த தொழிலாளிகள் வாழ்வில் மகிழ்ச்சியுண்டா? ஏதோவொரு காரணத்திற்காக கவலைப்படாத நாட்கள் புலர்ந்ததுண்டா? உழைப்பு உயர்ந்து வருமானம் பெருகும்போது அதை உயர்த்தியோர் வாழ்வும் வளம்பெறும் என்று அவர்கள் மனங்களில் விதைக்கப்பட்ட முதலாளித்துவ சிந்தனை கானல்நீரை துரத்துவதிலேயே இவர்கள் வாழ்வு முடிந்து விடுகிறது.

அண்மைக்காலங்களில், ரோபோவால் (Robot) தூண்டப்பட்ட வேலையிழப்பு தொடர்பான கவலைகள் இல்லையென்பதை மறுக்க முடியாது. தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு இசைவாக, குறைந்த திறன், நடுத்தர திறன் மற்றும் உயர் திறன் வேலைகளுக்கு இசைவாக உழைப்போர் தம்மை மாற்றியமைத்து தம-க்கும் முதலாளிகளுக்குமிடையில் சமநிலையைப் பேண முயற்சிக்கிறார்கள். ஆனாலும் அண்மைக்காலத்திய இயங்குதள சந்தைகளின் எழுச்சி, மக்கள் பணிபுரியும் முறையையும் அவர்கள் பணிபுரியும் விதி-முறைகளையும் மாற்றுகிறது. இது முறையான மற்றும் முறைசாரா வேலைகளுக்கிடையிலுள்ள பழுவை அதிகரிக்கிறது.ஏனெனில், உழைப்போர் பொதுவாக-குறைந்த உற்பத்தித் திறன் கொண்ட வேலையில் உள்ளனர். பெரும்பாலான உழைப்போர் சட்டங்கள் தெளிவாகவும் இல்லை, சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதும் இல்லை.




பணியாளர்களுக்கான முதலாளிகளின் பொறுப்புகள் பணியாளர் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்காது முதலாளி நலன் சார்ந்த அணுகலாகவே உள்ளது. எல்லோருக்கும் ஓய்வூதியம் என்ற நிலை இல்லை, சுகாதாரம் அல்லது வேலையின்மை காப்பீட்டுத் திட்டங்கள் இல்லை, நீண்டகால, ஒப்பந்த அடிப்-படையில் வேலை செய்வோருக்கு தொழிலாளர்க-ளுக்கான பாதுகாப்புகள் எதுவுமில்லை. அரச பயங்-கரவாதம் தலைவிரித்தாடும் எமது தாயகம் போன்ற நாடுகளிலும், தன்மக்களின் உழைப்பைச் சுரண்டி முதலாளிகளின் நலன்களை மட்டுமே பேணும் பல நாடுகளிலும் சட்டம் என்பதே கேலிக்கூத்தாயுள்ளது. ஊழலும் அடாவடிகளும் வேரோடியுள்ள இடத்தில் சட்டம், ஒழுங்கு என்பதெல்லாம் வெறும் சம்பிரதாயம் தான். உலக சனத்தொகையில் 51% ஆண்களும் 49% பெண்களும் இருப்பதாக புள்ளிவிபரம் ஒன்று குறிப்பிடுகிறது. எனினும் தொழில் அடிப்படையில் பார்க்கும்போது இந்த விகிதாசாரத்திற்கிடையிலான இடைவெளி குறிப்பிடத்தக்கதாகவுள்ளது.

எமது தாயகத்தைப் பொறுத்தவரை, இனஅழி-ப்பு நடவடிக்கைகள், அதனால் விளைந்த அங்கவீ-னங்கள், இடப்பெயர்வுகள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், பெண்கள் மீதான திட்டமிட்ட வன்முறை மற்றும் உரிமை மீறல் என்பனவும் அதைத் தொடர்ந்த தொடர் அவலங்களும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களும் பெண்-தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரித்துச் செல்கிறது. அதேசமயம் கல்வித்தரம் குறைவடைந்து செல்கிறது. முன்னேறிச் செல்லும் உலக தொழில்மயமாக்கலு-க்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் முகம் கொடு-த்து எமது தாயகத்தை வளர்த்தெடுக்க நாங்கள் ஒருமித்து கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. ஒன்றிணைவோம். எங்கள் தாயகத்தையும் அடுத்த தலைமுறையையும் கட்டமைப்போம்.

# பெண்களும் மன உறுதியும்

~ கலைஅமுதினி ~



**பெண்களை மதிக்கும் எம் தேசிய தலைவர் காலத்தில் தமிழீழப் பெண்கள் வரலாறு படைத்தார்கள் என்பது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வேண்டியவை**

பெண் ஒரு குடும்பத்தை கட்டியாளும் மன வலிமை கொண்டவள். ஆனால் இன்று தேசத்தைக் கட்டியாள்வதிலும் மனவலிமை கொண்டவளாக திகழ்கிறாள். அவள் பார்வை தூரநோக்கோடான சிந்தனைகள் அவள் குடும்பத்தையும், தேசத்தையும் கொண்டு செல்வதில் முன்னிற்கின்றன.

எதையும் தன் மன பலத்தால் சாதிக்கும் திறமை கொண்டவள். ஆண்களை விட உடல் ரீதியாக பலவீனமாக இருந்தாலும், மனவலிமையில் அவள் உறுதியானவள். உதாரணமாக தேசத்தைக் கட்டியெழுப்புவதில், ஆண்களுக்கு மேலான மனவுறுதியோடு போராடினார்கள். சமுக பார்வையை பெண் மாற்றினாள். தன் உரிமைக்காகவும், நாட்டின் உரிமைக்காகவும் போராடினார்கள்.

இன்றைய சூழலில் பெண்களுக்கு எதிரான வன் கொடுமைகள் அதிகரித்து வருகின்றது. பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்ணை இச் சமுகம் விரோதி போல பார்க்கிறது. அது தற்செயலாக ஏற்பட்ட விபத்து. அது ஆணாதிக்க சர்வாதிகார நிகழ்வு. ஒரு நாட்டில் யுத்தம் ஏற்பட்டாலும், அந்நிய இராணுவம் உள் நுழைந்தாலும் பாதிக்கப்படுவது பெண்களே. பெண்கள் மீது வலிந்து திணிக்கப்படுகின்ற இச் செயலானது உடலளவில் பாதிப்பை ஏற்படுத்தினாலும், அதனைக் கடந்து செல்வதற்கு பெண்கள் மிகவும் போராட வேண்டி இருந்தது.

இவ் நூற்றாண்டின் உறுதிமிக்க பெண்களுக்கு மிகச் சிறந்த உதாரணமாக திகழ்பவர்கள் தமிழீழப் பெண்கள். இவர்கள் நாட்டுக்காக ஆயுதமேந்தி போராடினார்கள். தங்கள் வலிமையை நிருபிக்க ஆண்களுக்கு நிகராக சமவலிமை தேவைப்பட்டது. ஒவ்வொரு விடயத்திலும், மிகத் தெளிவுடன், மன உறுதியுடனும் போராடி தேச விடுதலையில், மற்றைய சமூகம் சார்ந்த பணியிலும், தொழில் நுட்பத்துறையிலும் தமது அசைக்க முடியாத மனவுறுதியினால் முன்னேறி பல சாதனைகள் புரிந்தார்கள்.

ஆயுதமேந்தி போராடுவதில் மட்டுமன்றி நாட்டின் உள்ள சகலதுறைகளிலும் மிகவும் உயர்ந்த இடத் தில் இருந்தார்கள். இச் சாதனை அவர்களின் இரண்டு தசாப்தங்களுக்கு மேலான மனவுறுதியின் வெற்றியாகும். பெண்களை மதிக்கும் எம் தேசிய



தலைவர் காலத்தில் தமிழீழப் பெண்கள் வரலாறு படைத்தார்கள் என்பது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வேண்டியவை.

கனவு கண்ட தேசமாக சம உரிமையுடன், மன-வலிமையுடன் போராடிய பெண்கள் இன்றைய யுத்த மௌனப்பின் பின்னால் மிகவும் கீழ்நிலைக்கு தள்ளப் பட்டார்கள். எந்த சமுதாயத்திற்காக மனவைராக்கி யத்துடன் போராடினார்களோ, எந்த சமுதாயம் அவர்களை கௌரவித்ததோ அதே மக்களால் மிகவும் இழிவாக பார்க்கப்பட்டார்கள், நடத்தப்பட் டார்கள்.

ஆனால் பெண்கள் எதையும் தாங்கி சகிப்புத்தன் மையுடனும் மனவுறுதியுடனும் தொடர்ந்து போராடி னார்கள். போராட்ட காலத்தில் வாழ்ந்த பெண் தலை-மையிலான குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் தம் குடும்பங்களைக் காப்பாற்ற இந்த நிமிடம் வரை மனவுறுதியுடன் போராடி வருகின்றார்கள். மனிதம் நிறைந்த பெண்களாக வாழ்கிறார்கள்.

காலவோட்டத்தில் பெண்கள் மிகவும் துன்பச் சூழலில் வாழ்ந்தாலும், யுத்த வடு தந்த குடும்ப சுமையை சுமந்து, தமது காணாமல் போன உறவு-கட்காய் குரல் கொடுத்தும், அன்றாட வாழ்கை போராட்டங்களை சகித்துக் கொண்டும் விழ விழ எழும் பீனிக்ஸ் பறவை போல, வருகின்ற தடைகளை உடைத்து, மன உறுதியுடன் போராடுகின்றார்கள்.

இறுதியாக பெண்களின் மனவுறுதிக்கு அவர்க-ளின் தாய்மையை ஒப்பிடலாம். கருவுற்ற நாளி லிருந்து பிரசவமாகும் வரை அவள் எதிர் நோக்கும் துன்பங்கள் ஆயிரமாயிரம். பிரசவத்தின் போது மறு ஜென்மம் எடுக்கின்றாள். ஆனால் அவள் மனவுறு தியை பாருங்கள். மீண்டும் ஒரு குழந்தைக்கு தாயாகி தன் மனவுறுதிக்கு சான்றாகிறாள்.

எனவே இச் சமுதாயம் பெண்களை இழிவுபடுத்தா மல், அவர்கள் தம் சுமைகளை சுமந்து மனவுறுதி யுடன் போராடி வெல்லும் போது, உன்னால் உதவ முடியாவிட்டாலும் உபத்திரவம் கொடுக்காமல், மனித நேயத்துடன், வாழ்வோம்.

……………………

# புதுப் புரட்சியே ...!

புதுப்புரட்சியே,
புலர்பொழுதை அழைத்து வா!
சமூக மலர்ச்சியே,
சமநிலையை நிறுவ வா!
வளர்ச்சியே,
மக்கள் எண்ணங்களை
உயர்த்த வா!
வீழ்ச்சியே,
தீய விளைவுகளை
வீழ்த்த வா!

கடலலையே,
நல்ல கனவுகளை
விதைக்க வா!
கதிரொளியே,
எதிரிகளை
விரட்ட வா!
நல்லிசையே,
என் தேசத்தை
பாட வா!
காற்றலையே,
உன் சுதந்திரத்தை
என் இனத்திற்கு
வழங்க வா!
வீரம் விளைந்த நிலமே–
உன்
பாதம் பணிந்தேத்துகிறோம்
எம் கண்ணீருக்கு விடைகொடுக்க
கனன்றே
நீ எழுந்து வா!

# நவீன உலகமும் குழந்தைகளும்

தாம் பெற்றெடுத்த குழந்தைகள் எவ்வாறு வளர வேண்டுமென கருவுற்ற நாளிலிருந்து பெற்றார் கனவு காணத் தொடங்கிவிடுகின்றனர். பிள்ளைகளை நற் பெயருடையவர்களாக, அறிவில்சிறந்தவர்களாக, எல்லோருக்கும் உதவும் மனித நேயமிக்கவர்களாக, மற்றவருக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டுமெனவே பெரும்பாலான பெற்றோர் கனவு காண்கின்றனர்.

சிறு வயதில் நாம் கற்றுக் கொடுக்கும் நற்பண்புகள், பழக்க வழக்கங்கள், கல்வியறிவு, பெரியவர்களை மதிக்கும் தன்மை, மற்றவர்களுக்கு உதவுதல் என்பன அவற்றில் சில. இத்தகைய நற் பண்புகளை வளர்ப்பதில் கூடுதலாக அக்கறை காட்டுபவர்கள் பெற்றவர்களின் பெற்றோராகும்.

அன்றைய கால கூட்டுக்குடும்ப வாழ்க்கை மிகச் சிறந்ததாகும். இவ் நவீன யுகத்தில் கூட்டுக்குடும்பம், தனிக் குடும்பமாகி, தம் தேவைகளுக்கு ஏற்ப பெற்றவர் இருவரும் வேலைக்கு செல்ல வேண்டிய சூழலில், பிள்ளைகளை பராமரிப்பு நிலையத்திலோ, அல்லது வேறு ஒருவரின் தயவில் விட வேண்டியுள்ளது. எப்படி வளர்ந்தாலும், உரிய காலங்களில், உரிய நேரங்களில் கிடைக்க வேண்டிய பெற்றவர் அரவணைப்பு பிள்ளைகளுக்கு கிடைக்காமல் போகிறது.

அத்துடன் வீட்டில் இருக்கும் காலங்களில் கூட தம் பிள்ளைகளுடன் நேரங்களை செலவழிப்பது






என்பது குதிரைக்கொம்பாகி விட பிள்ளைகள் தம் நேரங்களை தொலைக்காட்சி பார்ப்பதிலும், கணிப் பொறி மூலம் விளையாடுவதிலும், பசிக்கும் போது நொருக்குதீனி சாப்பிடுவதிலும், அடம் பிடித்து தம் காரியத்தை சாதிப்பதிலும் உள்ளனர். பெற்றவர்களும் இது பிள்ளை பராமரிப்பதற்கான, சிறந்த வழி என எண்ணுகின்றனர். வீட்டிலிருக்கும் நேரத்தில் கூட, பிள்ளைகளுடன் உரையாட நேரமின்றியிருக்கும் பெற்றோரே அதிகம்.

பெற்றோர்கள்! ஒரு கணம் சிந்தியுங்கள்

பிள்ளைகளுடன் நேரத்தை செலவழிக்காது, தங்களது வருமானங்களுக்காக உருவாக்கப்படும் சீரியல் தொடர்களை பார்க்காவிட்டால் ஏதோ பெரிய பிரச்சினையாக பிள்ளைகள் மீது கோபப்படும் பெற்றோரே அதிகம். பிள்ளைகளை சிறந்த நற் பிரஜைகளாக







உருவாக்குவதைவிட வேறெதுவும் முக்கியமில்லை என உணர வேண்டும்.

பிள்ளைகள் பெற்றவர் அரவணைப்புக்காக ஏங்கி இருக்கும் போது, அது அவர்களுக்கு பூரணமாக கிடைப்பதில்லை. மாறாக கடுகடுவென பேசும் பெற்றோர்களே அதிகம். இது உண்மையான கருத்தாவென கண்ணை மூடி யோசித்துப் பாருங்கள் புரியும். இதனால் பெரும்பாலான பிள்ளைகள் தம் அறையை விட்டு வெளிவராது கணிப்பொறியுடனே அதிக நேரத்தை செலவிடுகிறார்கள். இதனால் பசியின் போது நொறுக்கு தீனிகளை உட்கொண்டு உடற் பருமனாகவும், சுறுசுறுப்பற்றவர்களாகவும், பிடிவாதம், முரட்டு கோபம் என்பன உள்ளவர்களாக உருவாகின்றனர்.




அத்துடன் பிள்ளைகளை படியென அறைக்குள் முடக்கிவிட்டு, பெரிய ஒலி வடிவில் தொலைக்காட்சியைப் பார்க்கும் போது, பிள்ளைகள் பொறுமையிழந்து, சலிப்புத் தன்மையுடன் வளர்கிறார்கள். இது இவர்கள் உள வளர்ச்சியை பாதிப்பதுடன், தம்மை மற்றவர் கவனிக்க வேண்டுமென்பதற்காக சிறு சிறு குழப்படிகள் செய்து, அதுவே அவர்கள் வாழ்வின் தினம் தினம் நடைபெறும் நிகழ்வாக மாறிவிடுகின்றது.

அன்று கூட்டுக்குடும்பங்களின் கண்காணிப்பு காணப்பட்டதால் பழக்க வழக்கம், பண்பாடு, கலாச்சார முறைகள் சொல்லி வளர்க்கப்பட்டதால், பிள்ளைகள் தம் குடும்ப கஷ்ட நஷ்டங்கள் உணர்ந்த நற் பிரஜைகளாகளாக உருவானார்கள்.

ஆனால் இன்று தனிக் குடும்பங்களில் குழந்தைகளின் தேவைகள் எளிதில் பூர்த்தியாவதால், அவர்களுக்கு பொருட்கள் மதிப்பு, பெற்றவர் கஷ்டம் ஏதும் அறியாமலே கண்டதே காட்சி, கொண்டது கோலம் என பணத்தின் மதிப்பு தெரியாமலும், மற்றவர்களை மதிக்கும் தன்மை தெரியாமலும் உள்ளார்கள். இச் சூழலில் வளரும் பிள்ளைகள் பெற்றோரை மதிப்பதே இல்லை. பெற்றவர்களே பிள்ளைக்கு பயந்து வாழும் சூழல் காணப்படுகிறது. கீழ்படியாத பிள்ளைகள் நாளைய சமுதாய வளர்ச்சியில், தம் சுய தேவையைக் கூட பூர்த்தி செய்ய இயலாநிலை காணப்படும்.

எனவே நவீன யுகத்தில், இயந்திரவியல் உலகில் வாழ்ந்தாலும், நாம் பிள்ளைகளுடன் செலவளிக்கும் நேரம் இன்றியமையாததாகும். வீட்டில் முடிந்தவரை அவர்களுடன் நேரத்தை செலவிட்டு, நல்வழிப்படுத்துவதும் அவசியமானதே. அத்துடன் தம் வாழ்க்கை அனுபவம், கடந்து வந்த பாதையில் நாம் சந்தித்த நல்லவை, கெட்டவை. அவற்றை கடந்து வந்த அனுபவங்களை எல்லாம் பிள்ளைகள் புரியும்படி கூற வேண்டும்

அது மட்டுமல்ல நற்பண்புகள், பழக்க வழக்கங்கள், உறவுமுறைகள், கலாச்சாரம், மனித நேயம் போன்ற பண்புகளை கற்றுக் கொடுக்க வேண்டும். அத்துடன் நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். புத்தகம் போன்ற நல்ல நண்பன் வேறெதுவும் இல்லை. எனவே நாளைய சமுதாயத்தை நல்வழியில் உருவாக்க பெற்றோர்களே முன்வர வேண்டும்.

~ கலைஅமுதினி ~


# மக்கள் கூட்டொருமையை சிதைக்கும் நவதாராளவாதம்

~ ந.மாலதி ~

மனிதர்களின் புத்திசாலித்தனம் இரண்டு பேரழிவு தரக்கூடிய வேலைகளை இரண்டாம் உலக யுத்தத்தின் விளைவாக செய்தது என்கிறார் நவீன சோக்கிரடீஸ் என்று அழைக்கப்படும் பேராசியர் நோம் சொம்ஸ்கி (Noam Chomsky).

ஒன்று அணுகுண்டு ஆயுதங்கள். இரண்டாம் உலக யுத்தமே அணுகுண்டு போட்டதுடன் முடிவுக்கு வந்தது. அப்போதே விஞ்ஞானிகள் அணுகுண்டு உற்பத்தி மேலும் விரிவடைந்து மனித குலத்தின் அழிவுக்கு வழி செய்யும் என்று பயந்தார்கள். அவர்கள் பயந்தது போலவே பூமியை பலமுறை முற்றாக அழிக்கக்கூடியளவு அணுகுண்டு ஆயுதங்கள் இன்று உலகை பயமுறுத்தியவண்ணம் உள்ளது. நிதானம் அற்ற ஒரு தலைவரின் கையில் இதை இயக்கும் வல்லமை போய்விட்டால் பேரழிவு தான். அவ்வாறான ஒரு பதற்ற நிலை இந்த ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் தோன்றியது பலருக்கும் நினைவிருக்கும்.

இரண்டாவது பேரழிவு உலக சூழலையே மாற்றுகி



றது. இந்த காலத்தை மானிடரால் - அழிவு காலம் என்றே குறிப்பிடலாம். அதாவது மானிடர்கள் சூழலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் கொண்டுவரும் பேரழிவு. இன்று பூமியில் உயிரினங்களின் வாழ்வுக்கே மிகப் பெரிய ஆபத்தாக இருக்கும் இரண்டு பேரழிவுக் கான வழிகளை எம்முடைய புத்திசாலித்தனத்தால் உருவாக்கியிருக்கிறோம் என்பது பேராசிரியர் சொம் ஸ்கி மீண்டும் மீண்டும் சொல்லிவரும் கருத்து.

இவ்விரண்டு பேரழிவுகளும் மனிதர்களால் உரு வானதால் அவற்றை மனிதர்களே தடுத்து நிறுத்த முடியும். ஆனால் நவதாராளவாதத்தின் கீழ் வாழும் மக்களால் இதற்கெதிரான போராட்டத்தை கூட் டொருமையுடன் தீவிரமாக முன்னெடுக்க முடியாது. ஏனெனில் நவதாராளவாதம் மக்கள் கூட்டொரு மையை சிதைத்து அவர்களை தனிமனிதர்களாக உடைக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் மக்கள் கூட்டொருமை சிதைக்கப்படுவது சனநாயகத்தின் அடித்தளத்தையே சிதைப்பது போன்றது.

புலம் பெயர் ஈழத்தமிழர்களிடையே கூட்டொருமை பலவீனப்பட்டிருப்பதற்கு நவதாராளவாத பொருளா தாரத்தின் கீழ் வாழ்வதும் ஒரு காரணம். இதே நவ தாராளவாதம் என்ற சொல்லை ஈழத்தமிழர் மத்தி யில் பிரபலமாக்க வேண்டும் என்று பேராசிரியர் அன்டி ஹிகின்பொத்தம் (Andy Higginbottom) பேசிய ஒரு உரையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கேட்டேன். கொம்யூனிசிய ரசியவின் மக்கள் தாம் கொம்யூனி சத்தின் கீழ் வாழ்கிறோம் என்று தெரியாமல் இருந் தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இன்றைய மக்கள் தாம் நவதாராளவாதத்தின் கீழ் வாழ்கிறோம் என்று தெரியாமல் இருப்பது என்கிறார் ஜோர்ஜ் மொம் பையட் (George Monbiot) என்னும் சூழல் ஆர்வலர். வலதுசாரி பொருளாதார சிந்தனை கொண்டவர்கள் இப்படி ஒரு பொருள் பதிந்த சொல் கிடையாது என்று வாதிட்டு வந்தார்கள். ஆனால் 2016 இல் உலக வங் கியே இச்சொல்லை கையாண்டு இது வளரும் நாட்டு மக்களுக்கு நன்மை கொண்டுவரவில்லை என்று புதிதாக அறிந்தது போல் சொன்னது. அதே நேரம் இடதுசாரி சிந்தனை கொண்டவர்கள் இதுபற்றி தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறார்கள்.

'தாராளவாதம்' லிபரலிசம் என்ற ஆங்கில வார்த் தையின் தமிழாக்கம். இச்சொல்லை அரசியலுக்கும், பொருளாதாரத்திற்கும், சமய கொள்கைகளுக்கும் கூட சொல்லலாம். இக்கட்டுரையில் பேசப்படுவது பொருளாதார தாராளவாதம். நவதாராளவாதம் இதன் ஒரு அம்சமே. 'நவ' என்பதால் ஒரு புதிய தாராளவா தத்தைப் பற்றி பேசுகிறோம் என்று புரிந்து கொள் ளலாம்.


அப்படியானால் பழைய தாராளவாதம் என்ன? அடம் சிமித் என்ற பொருளாதார நிபுணர் 1776 இல்

**நவதாராளவாதம்**
**மக்கள் கூட்டொருமையை சிதைத்து அவர்களை தனிமனிதர்களாக உடைக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் மக்கள் கூட்டொருமை சிதைக்கப்படுவது சனநாயகத்தின் அடித்தளத்தையே சிதைப்பது போன்றது**

ஐரோப்பாவில், 'நாடுகளின் செல்வம்' என்ற ஒரு பொருளா தார நூலை வெளியிட்டார். பொருளாதார விடயங்களில் அரசின் தலையீடுகளை, உற்பத்தி, விற்பனை, வரி போன்றவற்றை, குறைக்க வேண்டும் என்று வாதிட்டார். வர்த்தக சுதந்திரம் (Free Trade) நாட்டின் பொருளாதாரத்ததை வளர்க்க சிறந்த வழி என் றார். இவ்வாறான கொள்கைகள் 'தாராளவாதம்' அதாவது கட்டுப்பாடுகள் அற்றவை எனப்பட்டது.

பொருளாதார தாராளவாதத்தின் அம்சங்களாக தனிமனித சுதந்திரம், வர்த்தக சுதந்திரம், போட்டி என்பன வளர்க்கப்பட்டன. இதன் வளர்ச்சி முதலா ளிகள் கொள்ளை லாபம் ஈட்டவும் வழிசெய்தது.

தொடர்ந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக பொருளா தார தாராளவாதம் கோலோச்சியது. 1930களில் ஏற்பட்ட மாபெரும் பொருளாதார அழுத்தத்தை தொடர்ந்து கெயின்ஸ் என்பவர் அடம் சிமித்தின் பொருளா தார தாராளவாதமே முதலாளித்துவத்திற்கு சிறந்த கொள்கை என்ற கருத்தை மறுத்தார். எல்லோரும் வேலையில் ஈடுபடுவது முதலாளித்துவத்திற்கு அவசி யம் என்பதால் அரசும் மத்திய வங்கியும் தலையிட்டு வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும் என்றார். இக்கருத்து அன்றைய உலகில் தாக்கம் செலுத்தி யது. இதனால் பலரின் வாழ்க்கையில் மேம்பாடுகள் உருவாகின. அரசு பொது நன்மையை முன்வைத்து செயற்பட வேண்டும் என்ற எண்ணம் பிரபலமானது. மக்கள் பொது நன்மை பற்றி சிந்தித்தார்கள் போராடினார்கள்.



ஆனால் தொடர்ந்த 25 வருடகால முதலாளித்துவத்தின் பிரச்சனைகளும் அதனோடு சேர்ந்த சுருங்கி வரும் கார்பரேட் முதலாளிகளின் இலாபமும் தாராளவாதத்திற்கு புத்துயிர் கொடுக்க செய்தன. இதனாலேயே இதற்கு 'நவ' என்ற அடைமொழி சேர்கிறது. முதாலாளித்துவ பொருளாதாரம் உலமயமாக்கப்பட்ட இக்காலத்தில் நவதாராளவாதத்தை உலகளாவிய ரீதியில் இப்போது பார்க்கிறோம்.

நவதாராளவாதம் ஒரு சில பொருளாதார கொள்கைகளை உள்ளடக்குகிறது. உலகம் எங்கும், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற, சக்தி வாய்ந்த நிதி நிறுவனங்கள் நவதாராளவாதத்தை நாடுகள் மேல் திணிக்கின்றன. நவதாராளவாதத்தின் முக்கிய அம்சங்களில் பின்வருவன அடங்கும்:

### 1. சந்தையின் ஆட்சி:

தனியார் தொழில் முயற்சிகளை சுதந்திரமாக எவ்விதமான அரசாங்க தடங்கல்களுமின்றி நடத்துவது. இதனால் எவ்வளவு மோசமான சமூக இழப்புக்கள் ஏற்பட்டாலும் அரசு தலையிடக்கூடாது. பின்வருவன இவற்றில் அடங்கும்:

சர்வதேச அளவில் சந்தையை திறப்பதும், சர்வதேச நிதியை முதலீடு செய்வதில் உள்ள தடங்கல்களை ஒழிப்பதும், பல வருட போராட்டங்களால் பெற்றுக்கொண்ட தொழிலாளர் ஊதியத்தை குறைப்பதும், தொழிலாளர் உரிமைகளை ஒழிப்பதும், மற்றும் சந்தையில் விலையை கட்டுப்படுத்தாமல் விடுவது. ஆக, முதலீடுகளும், பொருட்களும், சேவைகளும் முழுச்சுதந்திரத்துடன் இயங்குவது. இதுவே எமக்கு நன்மை தரும் என்று எங்களை நம்பச் செய்வதற்காக அவர்கள் '**கட்டுப்படுத்தாத சந்தையே பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த வழி. இதுவே இறுதியில் எல்லோருக்கும் நன்மை தரும்**' என்பார்கள்.

### 2. சமூக சேவைகளுக்கு செலவு செய்வதை குறை த்தல்:

கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளுக்கான செலவைக் குறைத்தல். வறியவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கக்கூடிய சேவைகளை குறைத்தல். பொதுச் சேவைகளான வீதிகள், பாலங்கள், தண்ணீர் விநியோகம் போன்றவற்றை குறைத்தல். சொல்லப் போனால் அரசாங்கத்தின் பங்கை எங்கும் குறைத்தல் என்ற நோக்கில் செயற்படுதல். இருந்தாலும் வர்த்தகத்திற்கு சாதகமாக அரசு உதவுவதையும் வரிவிலக்குகள் கொடுப்பதையும் இவர்கள் எதிர்க்க மாட்டார்கள்.

### 3. கட்டுப்பாடுகள் களைதல்:

இலாபத்தை குறைக்கக் கூடிய அரச கட்டுப்பாடுகள் யாவற்றையும், சூழல் பாதுகாப்பு, தொழில் சூழலில் தொழிலாளர் பாதுகாப்பு உட்பட, குறைத்தல்.

**மக்கள் கூட்டொருமையை சிதைத்து சனநாயகத்தின் அடித்தளத்தையே தகர்க்கும் நவதாராளவாதத்தை புரிந்து கொள்வது மக்கள் கூட்டொருமையை வளர்க்க எண்ணுபவர்களுக்கு அவசியமானது**

### 4.தனியார்மயமாக்கல்:

அரச சேவைகள், சொத்துக்கள், தொழில்கள் யாவற்றையும் தனியாருக்கு விற்றல். இதில்: வங்கிகள், முக்கியமான உற்பத்திகள், ரயில் பாதைகள், வீதிகளில் செலுத்தக்கூடிய சுங்கவரிகள், மின்சாரம், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள் மற்றும் தண்ணீரும் கூட அடங்கும். திறமையாக செயற்பட இவை தேவை என்ற நோக்கில் இவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. திறமையாக செயற்படுவது தேவைதான். ஆனால் தனியார் மயமாக்கல் செல்வத்தை ஒருசிலரிடம் குவித்து பொதுமக்கள் தமது அடிப்டை தேவைகளையும் பணம் கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படுகிறார்கள்.

### 5.போது நன்மை மற்றும் சமூகம் என்ற கோட்பாடுகளையே அழித்தல்:

பதிலாக 'தனிமனிதருடைய பொறுப்பு' என்ற கோட்பாட்டை விதைத்தல். சமூகத்தில் மிகவும் வறிய மக்களை சுகாதாரம், கல்வி போன்றவற்றிகான தேவைகளை தாமாகவே தேட வேண்டும் என்று சொல்லுதல். அவர்களால் இது முடியாத போது அவர்களை சோம்பறிகள் என்று குற்றம் சுமத்துதல்.


கடந்த 50 வருடங்களாக இது மிகப்பரவலாக எங்கும் கையாளப்பட்டு வருகிறது. இச்சொல் பரவலாக உபயோகிக்கப்படாவிட்டாலும், அதன் விளைவுகளை உலகம் எங்கும் காணலாம். பணமுள்ளவர்கள் அருவருக்கத்தக்க செல்வந்தர்களாகவும் ஏழைகள் இன்னும் ஏழைகளாகவும் மாறிவருவது நவதாராளவாதத்தின் பெயரில் உலகெங்கும் நடக்கிறது.

மக்கள் கூட்டொருமையை சிதைத்து சனநாயகத்தின் அடித்தளத்தையே தகர்க்கும் நவதாராளவாதத்தை புரிந்து கொள்வது மக்கள் கூட்டொருமையை வளர்க்க எண்ணுபவர்களுக்கு அவசியமானது.

# விழயலுக்காய் காத்திருக்கும் எம் நிலம்

நான் தமிழச்சி
என் மொழி தமிழ்
என் தேசம் தமிழீழம்
இறுமாந்து நின்றேன் நான் தமிழச்சி என்று
நெஞ்சு நிமிர்த்தி வலம் வந்தேன் எம் மண்ணில்
ஆண்ட தமிழினம் மீண்டும் ஆளுமென்று கர்வம் கொண்டேன்

எமக்கான நிலத்தைக் கண்டேன்
வழிநடத்திய தலைவனைக் கண்டேன்
நிலம்காக்க உயிரீந்த மறவரைக் கண்டேன்
நிலம் மீள உருகி உழைத்தவரைக் கண்டேன்



அத்தனையும் உருக்குலைந்து
சூனியமாகியது எம் வாழ்க்கை
நெஞ்சு விம்மி வெடிக்க
அமைதியாகியது எமது உணர்வுகள்
மூச்சுவிட முடியவில்லை– எமது நிலத்தில்
கால் ஊன்றி நடக்கமுடியவில்லை
அத்தனையும் எம்மைவிட்டு
பறிபோவதாய் உணர்கிறேன்
கருமேகங்கள் எம்மைச்
சூழ்வதாய் உணர்கிறேன்

எம் சூரிய தேவனே
எம் நிலத்துக்கு ஒளியைக் கொடு
எம் நிலம் செழிக்க வழிவிடு
எம் நிலத்துக்கான மிடுக்கோடும்
ஆண்டகாலத்துச் செழிப்போடும்
மீள எம் நிலத்தைப் பிரசவித்துவிடு..

~ செந்தழல் ~

# மே நாள் கூத்து



மானுடம் இங்கே
மாண்டு போனது
கார்ப்பரேட் கும்பலின்
காசுதான் வென்றது.
மே நாள் கூத்து
ஒரு புறம் நடக்கட்டும்.

தினம்தினம் இங்கே
செத்துப் பிழைக்கிறோம் – நாங்கள்
ஒரு பிடி சோற்றுக்காய்
ஒரு வாய் நீருக்காய்.
பகட்டு உடைகள்
எமக்கு வேண்டாம்
பாழும் உடலை
மறைக்க வேண்டாமோ?
மே நாள் கூத்து
ஒரு புறம் நடக்கட்டும்

உழைப்பை உறிஞ்சுவோர்
ஒய்யாரக்காரர் – எங்கள்
அடிப்படை உரிமையை
அள்ளித் தின்கிறார்
சோம்பேறி நீங்கள்
சொகுசுக் கார்களில்
உழைப்பாளிகள் – எங்கள்
பாளமாய் வெடித்த
பாதங்கள் தெருவில்
அனலாய் தகிக்கும்.
வெயிலில் நடக்கும்
சூரியன் மட்டுமா சுட்டெரிக்கும்? – எங்கள்
கும்பிகள் கூட கொதித்துப் புலம்பும்.
மே நாள் கூத்து
ஒரு புறம் நடக்கட்டும்.

முடிகள் திருத்த
ஒருவன் வருவான்
உடுப்பு தோய்க்க
வேறொரு கையாள்
வேளா வேளைக்கு ருசித்து உண்ண
உழவன் வயலில் தினமும் மடிவான்
செருப்பு துடைக்க – வீட்டு வேலையில்
செக்குமாடாய் மடிய
பல பேர் உந்தன் காலடி கிடப்பர்
சாமி சிலை வடிக்கவும்
ஒருவன் வேண்டும்
சாக்கடை அள்ளவும்
ஒருவன் வேண்டும்
சாதிகள் பலநூறு படைத்தது தவிர
நீயிங்கு செய்தது எதுவுமே இல்லை
வாழ்ந்தென்ன பயன்?
மே நாள் கூத்து
ஒரு புறம் நடக்கட்டும்

நாங்கள் இல்லாமல் நீங்கள் ஏது?
நானிலம் செழிக்கும் வாழ்வுதான் ஏது?
உழைக்கும் மனிதம்
ஒன்றாய் சேர்ந்து
உலகை மாற்றும்
வைகறை புலரும்
பொய்கள் எல்லாம் பொய்த்துப்போகும்
உறுதி எடுப்போம்
உணர்வாய் எழுவோம்

~ இன்பா ~

# சிறக்கட்டும் வாழ்வு...!

உழைத்து ஊரோடு பகிர்ந்து,
உயர்வோடு வாழ்ந்தவர்கள்,
உருக்குலைந்து உணவுக்கு
வழியின்றி நிற்கின்றனர்!
வீரத்தையும் சேர்த்து
வியர்வையுடன் இரத்தத்தையும்
சிந்தி உழைத்தவர்கள்–இன்று
ஊமையாகி வாழ்கின்றனர்!!

பசுமையும் சோலைகளுமாக
பூத்து குலுங்கிய நிலங்கள்
குமுறி போய் கிடக்கின்றன

உழுது புத்துயிர் பெற்று
மணம் வீசிய மண்ணுக்குள்
இன்றும் மரணங்களால்
விதைக்கப்பட்டு கொண்டுதான் இருக்கிறது....

வயிறு நிறைய சாப்பிட்டு மகிழ்ந்தவர்கள்
எவர் வந்தாலும் அன்போடு அள்ளிப்
பரிமாறிக் கொடுத்தவர்கள் இன்று
ஒரு வேளைக்கே அல்லல்படும்
அவல நிலைக்கு தள்ளப்பட்டுயிக்கிறது
எம்மினம்....



நிலமிழந்து,வாழ்விழந்து,
சொத்துயிழந்து,
வீதிகளில் வாழும் சூழல்
மே" என்றாலே
தொழிலாளர் தினம்மறந்து
அவலங்களும், கதறும் கூக்குரகள்
கேட்ட வண்ணம்!
மே" மாசம் வருகிறது என்றலே
மனசெல்லாம் வலியெடுக்கிறது!
ஆனாலும் நமக்கான
நீதிக்காய் உழைப்போம்
என்ற இலட்சியத்தை
முன்னெடுப்போம் இந்நாளில்!

ஏனெனில்
அணையாத கனவுகளும்
காவியங்களும் வாழும் தேசம்
எப்பொழுதும் உழைப்பால்
உயர்ந்து கொண்டே இருக்க வேண்டும்...

வியர்வையை சிந்தி
வெற்றியின் நாமத்தை
சொன்னவன் உழைப்பாளி
கொட்டும் பனியிலும் விறைப்பிலும்
உதிரம் உறைந்து
வாழ்க்கையை வெல்ல
கற்று தந்தவனும் உழைப்பாளி...!

ஆயிரம் எண்ணங்களையும்
கனவுகளையும் சுமந்து
அயராது உழைக்கும்
மனிதகுலங்கள் அனைவருக்கும்
என்றும் சிறக்கட்டும் வாழ்வு...!

~ சந்திரிகா ~ (கண்மணி)
01~05~21


congee
கஞ்சி
JUST ADD HOPE
“ஒரு சமூகம் தனது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மீளெழுச்சி பெற வேண்டுமெனில் அதை செய்து முடிக்கும் ஆற்றல் அச்சமூகத்தின் மக்களிடத்திலேயே உள்ளது.
தனி நபரோ, ஒரு சமூகமோ, தனது எதிர்காலத்திற்கான பொறுப்பை கையில் எடுக்க வேண்டுமானால் அதற்கான துணிவையும் நம்பிக்கையையும் கட்டி எழுப்ப வேண்டும்.”
கஞ்சி!
எமது நம்பிக்கை மற்றும் துணிவின் குறியீடு!
remember me
#congeeofhope
WWW.CONGEEOFHOPE.ORG
REMEMBERME@CONGEEOFHOPE.ORG
CONNECT WITH US
CONGEEOFHOPE
facebook
twitter
YouTube
Instagram
these are our stories of hope.

“முள்ளிவாய்க்காலை பொறுத்தவரை, எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாய் நின்ற வேளை நாம் உண்ட அந்த சிறிய உணவை தவிர வேறு எந்த நல்ல விடயங்களும் எமக்கு நடை பெற்றிருக்கவில்லை. தொடர்ச்சியான குண்டு மழைக்கு மத்தியில் உணவு உண்ணுவதற்கு ஒரு வாய்ப்புக்கிடைத்தால் அதுவே எமக்கிருந்த பொன்னான நேரம். ஏனெனில், அப்போதுதான் எமது இதயங்கள் படபடப்பதை நிறுத்தும், மக்களின் அலறல்கள் அடங்கும், குழந்தைகளின் அழு குரல்கள் ஓயும், பெற்றோர்கள் அமைதி அடைவார்கள்.”

**“கஞ்சி” என்பது பழைய நினைவுகளை மீட்டிப்பார்க்கும் ஒரு சாதாரண விடயம் அல்ல. ஒரு சமூகமே கேட்பாரற்று விரக்தியின் உச்சத்தில் நின்றவேளை நமக்கு நாமே தெம்பூட்டி எல்லா இன்னல்களையும் துணிவோடு எதிர்கொண்ட ஒரு இடத்திற்கே எம்மைக் கூட்டிச் செல்கின்றது இந்த கஞ்சி.**

congee கஞ்சி JUST ADD HOPE

# REMEMBER ME mullivaikkal



2009 ஆம் ஆண்டில் தமிழினப் படுகொலை முள்ளிவாய்க்காலில் தனது உச்சத்தைத் தொட்டது. இதை வருடந்தோறும் உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் மே 18 அன்று நினைவு கூறுகின்றனர். இந்த நினைவை வேறு பல வழிகளிலும் முன்னோக்கி எடுத்துச் செல் வதும், பாதிக்கப்பட்ட மக்களை நினைவில் கொள்வதும், எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதும் இன்றியமையாத செயல்கள் என நாம் நம்புகிறோம்.

கொடிய போரினால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, இழக்கக் கூடாத எல்லாவற்றையும் இழந்த நிலையில் உடுத்த உடை இன்றி உறங்க இடம் இன்றி அழிவின் விளிம்பில் நின்ற எமது மக்கள் உண்ட அந்த ஒருவேளை உணவே கொலைவெறி அரசின் குண்டு வீச்சுகளையும் கொடிய இராணுவத்தையும் எதிர்கொண்டு தொடர்ந்து நடைபோடும் வல்லமையை தந்த ஒரே விடயம். அதுவே அவர்களது நம்பிக்கையாகவும் இருந்திருக்கும்.




மிகக் கொடிய ஒரு நிகழ்வை ஒரு மிக எளிமையான செயற்பாட்டின் மூலம் சொல்வது மிக பொருத்தமானது. எமக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை இன்னொருவரின் மனதில் விதைப்பதற்கு உணவே உகந்தது என நாம் எண்ணுகின்றோம். அத்தோடு, இப்படியான ஒரு நிகழ்வை நாம் அடைய விரும்பும் சுதந்திரத்தின் வெளிப்பாடாகவும் பார்க்கின்றோம்.

## RECIPE FOR hope

BOIL 5 CUPS OF WATER,
ADD 200 GRAMS OF RED RICE TO IT,
ADD IN SALT AS DESIRED,
AND, JUST ADD HOPE

congee கஞ்சி JUST ADD HOPE

# APPEAL


முள்ளிவாய்க்காலில் ஒருவரை இன்னொருவர் பாதுகாப்பதற்கும், மக்களுக்கு உணவளிப்பதற்கும் பலரும் பல தியாகங்களை செய்துள்ளனர். இதில் கொல்லப்பட்ட, பாதிக்கப்பட்ட அனைவருமே எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க வேண்டும் எனும் அடிப்படை உரிமைக்கான எமது போராட்டத்தின் வீரர்களே. கஞ்சி பரிமாறுவதன் மூலம் அவர்களின் தியாகங்களுக்கு மதிப்பளிப்பதோடு சமூக மீளெழுச்சியையும் கட்டியெளுப்புவோம்.

1. **மே 12 தொடக்கம் 18 வரையான காலத்தை முள்ளிவாய்க்கால் வாரமாக பிரகடனப்படுத்தி கஞ்சி பரிமாறும் செயற்பாடுகளை முன்னெடுங்கள்.**
2. **வீடுகளில் ஒருவேளையேனும் கஞ்சியை உணவாக்கி முள்ளிவாய்க்கால் கதைகளையும் சேர்த்தே உங்கள் குழந்தைகளுக்கும் அயலவர்களுக்கும் பகிருங்கள்.**
3. **இந்நிகழ்வை ஒவ்வொரு ஆண்டும் முன்னெடுப்பதோடு இதை தமிழர் வாழ்வில் முள்ளிவாய்க்காலை நினைவுகூரும் ஒரு பண்பாட்டு நிகழ்வாக உருவாக்க உதவுங்கள்.**









congee கஞ்சி JUST ADD HOPE

express yourself

#congeeofhope

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலத்தில் அது தொடர்பான உங்கள் எண்ணங்களை சமூக ஊடகங்களில் வெளிப்படுத்துவதன் மூலம் இதற்கு வலு சேர்க்குமாறு வேண்டுகிறோம்.

Share Your Stories:

சாட்சியம்
கவிதை
ஓவியம்
ஆடல்
பாடல்

CONNECT WITH US
CONGEEOFHOPE

facebook
twitter
YouTube
Instagram



வாருங்கள் கஞ்சி பரிமாற!

முள்ளிவாய்க்காலை
மனதில் வைப்போம்,
வருடம் தோறும் இதை
முன்னெடுப்போம்,
மாண்டவருக்கு மதிப்பளிப்போம்,
நமது எதிர்காலத்தை
கையில் எடுப்போம்!


WWW.CONGEEOFHOPE.ORG
REMEMBERME@CONGEEOFHOPE.ORG

CONNECT WITH US
CONGEEOFHOPE

facebook
twitter
YouTube
Instagram

congee கஞ்சி JUST ADD HOPE

## BRAND ELEMENTS



congee

கஞ்சி JUST ADD HOPE

WWW.CONGEEOFHOPE.ORG

REMEMBERME@CONGEEOFHOPE.ORG

CONNECT WITH US

CONGEEOFHOPE

facebook

twitter

YouTube

Instagram



சிறுகதை

# காற்றிலாடும் இளந்தளிர்கள்

நிலமகள்

மாறன் மரஞ்செடி கொடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறான். அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் காலை வகுப்புக்கள் இல்லை. அதனால், தனக்குப் பிடித்தமான வேலைகளை அவன் மனம்விரும்பி செய்து கொண்டிருக்கிறான். இந்தவீடு, அவனது தந்தையின் தந்தை இராசேந் திரத்தினது வீடு. தாத்தா இங்கு தனியாக வசிப் பதால், நேரம் உள்ளபோதெல்லாம் அவருக்குத் துணையாக அவன் இங்கு வந்து தங்குவது வழக்கம்.

இது களிமண்ணாலான வீடு. ஒரு அறை, அதோடு இணைந்தே ஒரு சிறுமால். ஒரு சிறிய அடுக்களை, தனியாக. இவை ஒரு பெரிய வேப்பமரத்தின் கீழ் அமைந்துள்ளன. இதனால், இது எந்தக் கோடை யிலும் குழுகுழுவென்றுதான் இருக்கும். பூந்தோட்டம், வீட்டுத்தோட்டத்துடன் கூடிய இந்த பசுமைச் சூழல் அவனுக்குப்பிடித்திருந்தது. காலையும் மாலையும் அணில்கள் மைனாக்கள் புளுவுட்டிப்பபறவைகள், தேன்சிட்டுக்கள், வாலாட்டிக்குருவி கொண்டைக்-குருவி மரங்கொத்தி, மீன்கொத்தி, இரட்டைவால்க்-குருவி, பச்சைக்கிளி, காக்கைகள் என பலவிதமான பறவைகளும் பிராணிகளும் கலகலப்பாக கீச்..கீச் என்று பேசிக்கொள்வதும் தாவித்தாவிப் பறந்து விடியலை அனுபவிப்பதும் உறவாடி மகிழவோடு வாழ்வாதும் காண்கையில் ஐயாவின் வீடே கல-கலப்பாக இருக்கும். இவையெல்லாம் ஐயாவைப் போன்று மாறனுக்கும் நாம் தனியாக இல்லை. இந்த வினோதமான உயிர்களின் உறவு, எம் வாழ்வோடும் கலந்து, இனிக்கிறதே என எண்ணவைக்கும்.

ஐயா அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து காலை-க்கடன்களை முடித்துவிட்டு அடுக்களையைச் சுத்தம் செய்து தேநீர் தயாரிப்பார். மாறன் சற்றுப் பிந்தித்தான் எழுவான் அவன் எழுந்ததும் பூந்தோ ட்டம் நோக்கிச் செல்வான். முதலில் அந்த அதி-காலைப்பொழுதின் சிவந்த பளபளப்பான ஒளியில் முற்றத்துப் பூமரங்கள் மின்னுவதை அவற்றின் மத்தி யில் நின்று அவதானிப்பான். வானத்தின் வர்ண மாற்றங்களின் யாலங்களை இரசிப்பான் அதற்கேற்ப பூமியின் யாலங்களும் மாறுவதை அவதானிக்கை யில், அது ஒரு வினோத உலகமாக அவனுக்குத் தோன்றும்.

அந்த அற்புத ஒளியாலங்களை அப்படியே வாங்கிப் பருகி, ஆனந்தத்தோடு மலர்கள், மொ-ட்டவிழ்வதைப்பார்க்க, தான் நின்றுகொண்டிருப்-பது தேவலோகமோ எனத் தோன்றும் அவனுக்கு. பரீட்சைக்காகப் படிக்கும் காலத்தில் இந்த அனு-பவங்களை இரசிக்க இவனுக்கு நேரமிலாமற் போன தையிட்டு மனம் வருந்துவான், அதற்கெல்லாம் சேர்த்து இப்பொழுது இரட்டிப்புநேரம் ஆரஅமர திருப்தியோடு இரசித்துக்கொண்டிருப்பான்.

இன்றுமட்டுமல்ல ஐயாவுடன் தங்கும் சமயங்களில் பூஞ்செடிகளுக்கு அவன்தான் நீர்வார்ப்பான். இன்றும் அப்படித்தான், ஐயா போட்டுக்கொடுத்த தேநீரை அருந்திவிட்டு மாறன் செடிகளுக்குத் தண்ணீர் வார்த்தான். வேருக்கு நீர்கிடைத்த அந்தச் செடிகள் தண்டு விறைப்பாகி, நிமிர்ந்து கிளைகள் சிலிர்த்து இலைகள் பூரித்து காற்றில் மெல்ல அசைவதைப் பார்க்க, அச்செடிகள் தமக்குத் தண்ணீர் கிடை-த்த மகிழ்ச்சியை இப்படி இனிமையாக அவனிடம் வெளிப்படுத்துகின்றனவோ என நினைக்கத்தோன் றும். பூவாளியால் அவற்றின் இலைகளுக்கு நீரை இறைப்பான். அப்பொழுது அவை, தூசி கழுவப்பட்டு தூயநிறத்தில் - இப்பொழுதுதான் வரைந்த ஈர ஓவி யம் போன்று கண்களுக்கு விருந்தளிக்கும்.

தாத்தா முற்றத்திற்கு நீர் தெளித்துவிட்டு, புழுதி எழுப்பாது முற்றத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தார். இருவருக்குமாக காலையுணவை மாறனின் தங்கை வாசுகி கொண்டுவருவாள் அவனது வீட்டிலிருந்து.

மணி காலை எட்டரையாகிறது என்பதை மாறனும் தாத்தாவும் புரிந்துகொண்டனர். ஏனெனில், தங்கை வாசுகியின் துவிச்சக்கரவண்டி, தாத்தாவின் வீட்டின் படலையில் நிற்கிறது. துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே உணவுப்பொட்டலத்துடன் வந்த வாசுகி அடுக்களைக்குள் சென்று உணவைப் பத்திரமாக மூடிவைத்துவிட்டு வெளியேறுகிறாள். 'ஐயா! சாப்பிட்டுவிட்டுப் பிறகு வேலை செய்யுங்கே-கா, அப்போதுதான் அண்ணாவும் நேரத்துக்குச் சாப் பிடுவான். அம்மா சொல்லிவிடச் சொன்னா' இப்படிச் சொல்லிக்கொண்டே வாசுகி படலையைத் திறக்கி றாள் போவதற்காக. 'சரியம்மா நீ சாப்பிட்டுவிட்ட-ாயா? தாத்தா உரத்துக்கேட்கிறார். 'இல்லை, இனித்தான் போய் சாப்பிட்டுவிட்டு, பத்துமணி ரியூசனுக்குப் புறப்படப்போகிறேன்' பதிலளித்தாள்

பேரப்பிள்ளை. 'சரி, சைக்கிள்ளைதான் போகிறியா, பத்திரமாகப் போய்வா' என வழியனுப்பினார் பேரன்.

இராசேந்திரம் மீண்டும் கை, கால், முகத்தைக் கழுவிக்கொண்டு, மாறனை அழைக்கிறார் சாப்பிடு வதற்காக. அவன் தனது தாத்தாவை, தமது தந்தை அழைப்பதைப் போன்று ஐயா என்றுதான் அழைப்பது வழக்கம். 'வாறேன் ஐயா' என்று கூறிக்கொண்டு கிணற்றடிக்கு ஓடுகிறான் கைகால்களைக் கழுவுவதற்காக.

சாப்பிட்டபின்பு இருவரும் ஒன்பது மணியளவில் மீண்டும் வேலை செய்யவதற்காகத் தோட்டப்பக்கம் செல்கிறார்கள். மாறன் சாதாரணதரப் பரீட்சையை எழுதிவிட்டு பரீட்சை முடிவுக்காகக் காத்திருப்ப தால் அவனுக்கு வீட்டுவேலைகளில் ஈடுபடுவதற்கும் ஐயாவுக்கு உதவுவதற்கும் இப்பொழுது சில நாட் களாக நேரம் இருக்கிறது. தாத்தாவுக்கு ஒத்தாசை செய்வது அவனுக்கு விருப்பமும் கூட.

'மாறன்.., மாறன்...' வெளியில் படலையில் ஆளுக்கொரு துவிச்சக்கர வண்டியில் வந்த, அவனது நண்பர்கள் கண்ணனும், மோகனும் அழைக்கின்றனர்.

'ஓ.. நிக்கிறன். இங்கே தோட்டப்பக்கம் வாங் கோ' அவர்களை உள்ளே அழைக்கிறான் மாறன். அவர்கள் வேலி அருகில் துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு, மாறனுக்கு அருகாமையில் வருகின்றனர். வெயில் உடலைப்புழுக்குவது போதாதென்று தாத்தாவுக்கு மனதுக்குள்ளும் இப்போ புழுங்கப் போகுது என எண்ணிக்கொண்டான் மாறன். ஏனென்றால், அவன் நண்பன் கண்ணன்தான் வெறுங் கையை வீசிட்டு வரத் தெரியாமல் செல் போனோடை வந்திருக்கிறானே. ஏற்கனவே தாத்தா இப்படி போனோடை சுற்றித்திரியிற இளசுகளை வர்ணிக்கிறதைத்தான் தெரியுமே மாறனுக்கு.

'வந்திட்டாங்கள் வேலை செய்யிற பையனைக் குழப்புறதுக்கு... போனுகளையும் மண்ணாங்கட்டிகளையும் கொண்டு...இதுகளைப் பெத்ததுகளுக்கு ஏன்தான் அறிவில்லாமல் போச்சுதோ தெரிய வில்லை...நாயாட்டம் தெருவழியிலே அலைய விட்டிருக்குதுகள். எப்பப்பார் தொழில் செய்யிற ஆயுதம் மாதிரி இந்த மண்ணாங் கட்டியைக் கையில வைச்சுக்கொண்டு சுற்றித்திரியிறது...' இப்படித்தான் தாத்தா திட்டியிருப்பார் மனசுக்குள்ள... உச்சியிலே தீப்பற்றினமாதிரி உள்ளுக்குள்ளே சன்னதம்தான்.

ஆனாலும், நண்பர்களை வரவேற்று, இரண்டு வார்த்தை கதைக்கத்தானே வேண்டும். அவன், அவர்கள் அருகில் வந்து... 'என்ன கண்ணன் எப்பபார்த்தாலும் போனையே நோண்டிட்டிருக்கிறியே எங்கடை பரீட்சை முடிவு எப்ப வருகிறதென்றாவது தெரியுமா' என்று கேட்டான் மாறன்.

கண்ணன் எங்கே பதில் சொல்வான்... கண்ணனைப் பற்றித்தான் மோகனுக்குத் தெரியுமே. எப்பப் பார்த்தாலும் ஏதாவது புதுப்புதுக் கேமை இறக்கி விளையாடிட்டே இருப்பான்...இல்லையென்றால் ஏதாவது சினிமாப்படத்தை இறக்கிப் பார்த்து இர சிச்சிட்டிருப்பான். என்பதைத் தெரிந்திருந்திருந்த மோகன். விடு மாறன் இவன் இதுகளெல்லாம் பார்க்கி றதுக்கா போனை வைச்சிருக்கிறான்... 'றிசல்ற் இந்தவாரத்துக்குள்ளே கிடைக்கும் என்றமாதிரித் தான் எங்கப்பா சொன்னார்.'

'சரி நீ கொம்பியூட்டர் வகுப்புக்குப் போக வில்லையா?' என்றான் போன் நோண்டிக்கொண் டதை விட்டுவிட்டு கண்ணன்.

'பார்ரா இவனுக்கு இனறைக்கு என்ன கிழமை என்று கூடத்தெரியேல்லை' என்றான் மோகன்.

மாறன் அவன் கேள்விக்கு வருமாறு பதிலளித்தான். இன்று ஞாற்றுக்கிழைமை கண்ணன். அதனாலே எனக்கு வகுப்பு இன்று இல்லை.

ஓ...! நான் மறந்திட்டன்டா.

அவ்விடத்தில் வேலிக்கரையில் நிழலில் பட்டுப் போய் விழுந்து கிடந்த, பூவரசுக் குற்றி மீது அவர்களை இருத்திவிட்டு மாறன் வேலைசெய்வதற்காகத் தோட்டத்துக்குட் சென்றான். மோகன் இடை யிடையே மாறனுக்குப் பேச்சுக்கொடுத்தான்.

'இந்த விடுதலைக்குள்ளே கிற்றார் பழக வேணும் என்று ஆசைப்பட்டன் முடியாமலே போயிற்றுது பார்த்தியாடா மாறன்.'

'ஏன் என்னாச்சு' என்றான் மாறன் வேலிக்கரை யில் இருந்த புற்களை மண்வெட்டியால் செருக்கிக் கொண்டே.

'கையில இன்சுருமென்ற் இல்லாமல் பழகப்போறது வீண் என்று அப்பா சொல்லிட்டாரடா. இப்போ கிற்றார் வாங்கிறதுக்கு பணம் எடுக்கிறது கடினம். ஏ எல் ஐ படிச்சுமுடி அதுக்குப் பிறகு ஒரு நீண்ட லீவு இருக்கும் அப்போ கண்டிப்பா பழகலாம் 'என்று கூறிவிட்டார்.

'அதனாலே என்ன இப்போ நீ ஆங்கில வகுப்புக்குப் போய்க்கொண்டுதானே இருக்கிறாய்... ஆங்கிலத்தி லேயாவது ஒரு முன்னேற்றம் வந்திருக்கும்தானே' என்றான் மாறன் அவனை ஆறுதல் படுத்துவதற்காக.

'மாறன் வெயில் ஏறிவிட்டது. வேலை போதும் வா' என்று அழைத்தவோறே ஐயா, வீட்டுப்பக்கமாகச் செல்கிறார். மாறன் புற்செருக்கிய இடத்தை நோக் கினான். இடையே ஒன்றிரண்டு இடத்தில் புல்லை வெட்டாமல் விட்டுப் போயிருக்கிறான். அடேய்

இப்படி அரைகுறையாக வேலைசெய்யிறதுக்கு நீ எங்களோடை இருந்து அரட்டை அடித்திருந்தாலும் பறவாயில்லையடா. என்றான் கண்ணன். மோகனும் பார்த்துவிட்டு ஒத்து ஊதினான். இவ்வளவு செய்த எனக்கு இந்தக் கொஞ்சப் புல்லை வெட்டுறதாடா கடினம். கிட்டப்போய்ப் பாருங்கடா...அந்தப் புற்செடியின் மீது இருக்கிற அழகான பூக்களை, அந்தக் கரும்பச்சைச் செடிகளுக்குள்ள... மெல்லிய ஊதா நிறத்தில ... அந்த இடம் நல்ல அழகா இருக்குதல்லா... அதனாலதான் பூ ஒழிஞ்சதும் வெட்டாலாம் என்று விட்டேன்ரா,

என்னடா புதுக்கதையெல்லாம் சொல்லிட்டிருக்கிறாய் அதுவும் புல்தானே. அது சரிதாண்டா ஆனால், என்கென்னவோ இப்படி பசுமைக்குள்ளே பூத்திருக்கிற எந்தப் பூக்களையும் பறிக்கிறதுக்கு மனசுவாறதில்லை. அது புல்லானாலும் வெட்டுறதுக்கும் மனசுவாறதில்லை... எந்த இடத்திலும் பூக்களின் அழகும் மென்மையும் தனிஅழகு மட்டுமல்ல, இயற்கை, இந்தப்பூக்கள் மூலம் எங்களுக்கு எதையோ சொல்லித்தர நினைக்கிறமாதிரி எனக்குத் தோன்றும். அது என்ன என்று எனக்கு முழுசாச் சொல்லத் தெரியேல்ல... இருந்தாலும் நான் எப்படி நினைக்கிறேன் என்றால், குழந்தைகளை எமக்கு மிகவும் பிடிக்குமல்லா அவர்களை அடிக்கவோ துன்புறுத்தவோ விரும்ப மாட்டோமல்லவா? அது போலத்தான்டா... பூக்களைப் பார்க்கிறபொழுதும் எனக்கு ஒரு குழந்தையைப் பார்க்கிற உணர்வுதான் தோன்றும்...

'பேசாம நீ நிறைய புனைகதை எழுதலாமடா ...' என்றான் நக்கலாக கண்ணன்.

மாறனுக்கு அவனது நக்கல் சற்று வருத்தமாகத் தான் இருந்தது.

மாறன் திசை திருப்பினான்... உன்னைமாதிரி விடாமல் போனையே நோண்டிக்கொண்டிருந்தால் இயற்கையை இரசிக்கிற உணர்வெல்லாம் எங்கே வரப்போகுது உனக்கு. இதைப்பற்றித்தான் என்ன புரியப்போகுது ...

'மூடுடா ஏதோ நீ தான் பெரிய இயற்கை இரசிகன் மாதிரி.' கண்ணன் அதட்டினான்.

அதற்குள் மோகன் இல்லையடா கண்ணன், அவன் சொல்லுறதலை அர்த்தம் இருக்குத் தானேயடா!

எனக்குக் கூட இவனளவுக்கு இல்லையென்றாலும்.. இப்படிப் பூக்கள், அழகான இடங்களைப் பார்க்கும் பொழுது வாயுக்குள்ளே ஏதோ பாட்டு மெட்டுக்களை முணுமுணுக்கத் தோன்றும்' என்றான்.

'மாறன்...' ஐயா, குரல் கொடுப்பது மீண்டும் கேட்கிறது மாறனுக்கு. வீட்டுப்பக்கம் நோக்கினான். ஐயாவுக்குப் பக்கத்தில் தாரணி நிற்கிறாள்.

## சிறுகதை

ஐயா சொல்கிறார், 'இந்தா இந்தப் பிள்ளை உன்னண்டை ஏதோ பாடக்கொப்பி வாங்கோணுமாம் உன்னை விசாரிக்குது.

'ஓ! கடந்த வெள்ளி கணினி வகுப்புக்கு தாரணி வரேல்லை. அதுதான் கணினிப்பாடக்கொப்பி வாங்க வந்திருக்கிறாள் போலும்' என்று எண்ணியவாறு நண்பர்களுடன் வீட்டுப்பக்கமாக நடந்தான். அவன் வெள்ளிக்கிழமை வகுப்பிலிருந்து நேராக ஐயா வீட்டிற்குத் தான் வந்திருந்தான் அதனாலே கொப்பி இங்கேதான் இருந்தது.

அவன் முற்றத்தை அண்மித்ததும் தாரணி கேட்டாள் 'மாறன் உன்னுடைய கணினிப்பாடக் கொப்பியை ஒருக்கால் தருவாயா? நேற்றைக்கான பாடத்தை எழுதுவிட்டு நாளைக்கே தந்துவிடுறேன்'

'ஆ..சரி எடுத்திட்டுவாறன்' மாறன் இவ்வாறு பதிலளித்தவாறே கொப்பியை எடுத்து வருவதற்காக வீட்டுக்குள் செல்கின்றான்.

அதற்குள்ளே கண்ணனுக்கு ஏதோ தோன்றியிருக்க வேண்டும். ஏன்டி தாரணி, சுமதி தன்னுடைய கொப்பியைத் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டாளா? என்றான்.

தாரணிக்குப் கோபம் பத்திக்கொண்டுவந்தது. இருந்தாலும் அதைக் கடுமையாக வெளிக்காட்டாமல் அவனின் வாயை மூடநினைத்தாள். எனவே என்ன தெரியாத மாதிரிக் கேட்கிறாய் அவள்தான் வெள்ளி பின்னேரம் பிள்ளையார் கோவிலுக்குவந்தாளாமே அங்கே நீயும்தான் வந்திருந்தியாமே...

'ஓமெல்லே நான் அதை மறந்திட்டன்...' என்றான் கண்ணன்.

மறந்திட்டியா... என்னைக் கலாய்க்கவென்று மறந்ததுமாதிரி நடிக்கிறியா...? அவள் எங்கே போனா லும் அவபின்னாலே விடாமற் துரத்திக் கொண்டுதிரியிறது... அதுக்குள்ள நடிப்பு வேண்டிக்கிடக்கு...சும்மா இருக்கிறதுகளின்ரை மனசைக் கலைக்கிறது...வேதாளம்..! என்று மனசுக்குள் பொரிந்து தள்ளியவள் மாறன் கொப்பியைக் கொடுத்ததும் 'தாங்ஸ் மாறன் சொன்னமாதிரி நாளைக்கே தந்திடுறன்' என்று சொல்லிக்கொண்டு அவ்விடத்தில் தாமதிக்காமல் விர் என்று கிளம்பிப் போய்விட்டாள் துவிச்சக்கரவண்டியில்.

மோகன் தொடங்கினான். 'ஏன்டா உனக்கு வாயை வைச்சுக்கொண்டு சும்மா இருக்கத் தெரியாதா?

வாயைக்குடுத்து நீதான் அசிங்கப்பட்டாய் பார்த்தியா?' என்றான். மாறனும் அதைக் ஆமாதிப்பது போல தலையசைத்தான்.

வெறுப்படைந்த கண்ணன், தன் வாயை அடைக்க நினைத்தானோ, அல்லது அவர்களுக்கு ஆசைகாட்ட எண்ணினானோ என்னவோ... காற் சட்டைப் பையினுள் இருந்த மிக்சர் பையை எடுத்து வாய்க்குள் அண்ணாந்து கொட்டினான், மிகுதியை சட்டைப் பைக்குள் மீண்டும் திணித்தான். இந்தா சாப்பிடு என்று அவர்களை ஒரு வார்த்தை கேட்கவில்லை. அவர்களும் அதற்காக எதிர்பார்க்கவில்லை. ஐயாவின் பூக்கன்றுகளைப் பார்வையிடுவதுபோல விலகினர்.

என்னடா மாறன், உங்க ஐயாவா இந்தப் பூக்கன்றுகளை வளர்க்கிறார். ஓமோம், சோதனை எழுதும் வரை எனக்கெங்கே நேரம். நாங்கள் இப்ப இருக்கிற வீடு ஐயாவின் வீடுதான். அங்கே ஐயம்மா வைத்து வளர்த்த பூஞ்செடிகள் ஏராளம் உள்ளது. அவற்றின் பாகங்களைக் கொண்டுவந்து ஐயா, தான் இந்த வீட்டுக்கு வருகிறபொழுது இங்கேயும் உண்டாக்கிவிட்டார்.

ஐயாவின் ஒரு தோட்டக்காணியை ஐயம்மாவின் மருத்துவச்செலவுக்காகத்தான் ஐயா விற்றுவிட்டார். அதனாலேதான், இப்ப இங்கே வீட்டைச்சுற்றி தோட்டத்தை வைத்திருக்கிறார்.

அவ்வளவு செலவு செய்தும் உனது ஐயம்மா உயிர் பிழைக்கவில்லையேடா. ஓ ..அது எங்கட துரதிர்ஷ்டம். அவவுக்கு கிட்னிப்பிரச்சனை வந்திட்டதால காப்பாற்றேலாமல் போயிடுத்து.

மரக்கறிவகைகள், தானிய வகைகளுக்குப் பயன்படுத்துகிற கிருமி நாசினிகள்தான் முக்கியமாக சிறுநீரகப்பிரச்சினைக்கு காரணம் என்ற தகவல்கள் பொதுவாக இருக்குது. உன்னுடைய ஐயம்மாவுக்கும் இது காரணமாக அமைந்திருந்திருக்குமோடா..?

இருக்கலாம்.. ஐயம்மா சுகமாக இருக்கும் வரைக்கும் இந்த செயற்கைப் பீடைகொல்லிகளை அவ தான் கலந்து வைக்கிறது. ஐயாதான் கொண்டு போய் தோட்டத்துக்கு அடிக்கிறது. ஐயா எவ்வளவு சொன்னாலும் அவ கேட்கமாட்டாவாம். அதை தானேதான் செய்யவேணும் என்று நிற்பாவாம்.

ஐயா இந்த பூமரங்களில் காட்டுகிற அக்கறையையும் நெருக்கத்தையும் பார்க்கிறபொழுது, சில வேளை இந்த பூஞ்செடிகள் அவரின் கனமான மனசுக்கு இதமளிக்குதோ என்னவோ,,, அவ்வளவு ஈடுபாட்டோடைசெய்கிறார்.

இருவரும் கண்ணனை திரும்பிப்பார்க்கிறார்கள். கண்ணன் மிக்சர் முழுவதையும் தீர்த்துக்கட்டி விட்டு, மறுபடியும் தொலைபேசியை நோண்ட ஆரம்பித்து விட்டான். இதைப்பார்த்த மோகன், 'என்னடா இவன் இந்த போன் இல்லாட்டி செத்திடுவான் போல...' என்றான்.

அவன் சொல்வது மாறன் காதில் விழுந்தாலும்... கண்ணன் மிக்சரைச் சாப்பிட்டுவிட்டு கீழேபோட்டிருந்த பொலித்தீன் பைமீதுதான் அவன் கவனம் சென்றது. ஐயா காலையில் தண்ணீர் தெளித்துக் கூட்டி அழகாக இருந்த முற்றத்தில் அந்தப் பொலித்தீன் பை தெளிவாகத் தெரிந்தது அவனுக்கு. ஐயா பார்ப்பதற்குமுன் அதை எடுத்துவிட நினைத்தான் ஆனால், ஆடுகளை மேயக் கட்டிவிட்டு வந்த ஐயா, அதைப்பார்த்துவிட்டார்.

'ஐயா நான் எடுக்கிறன் நீங்கள் விடுங்க..' என்று மாறன் கூறிக்கொண்டு கிட்ட வருவதற்குள் அவர் அதைக் குனிந்து எடுத்துக்கொண்டார். எடுத்தவர், கண்ணனுக்குச் சற்று உறைக்கும்படி 'ஏன் தம்பி நீ பத்தாம் வகுப்புத் தாண்டிவிட்டியல்லவா..? பொலித்தீனைப்பற்றி எதுவும் பள்ளியில சொல்லித்தரவில்லையோ... இருக்கட்டும்... நின்றநின்ற இடத்திலை அதை வீசக்கூடாதென்றுங்கூடவா சொல்லித்தர வில்லை...?' என்றார் சற்றுக் கடுப்போடு...

இந்தக் கிழட்டுக்கு இதெல்லாம்கூடத் தெரியுமா, என்று மனதுக்குள் கறுவிக்கொண்டான் கண்ணன். பெரிய இவர் இதை என்ன தான் பண்ணப்போறார் என்று பார்ப்போம் என்று அவர்போகும் திசையைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஐயா அந்தப் பொலித்தீனை ஒரு தகரப்பீப்பாவில் ஏற்கனவே சேகரிக்கப்பட்டிருக்கும் பொலித்தீன்களுடன் சேர்துவிட்டு தகரப்பீப்பாவை மூடினார்.

கண்ணனின் தொலைபேசி அழைப்புமணி கிறீங் கிறீங் என்று அலறியது. ஆ... சொல்லுங்கண்ண... ஆ.. சரிங்கண்ணா... நீங்க சொன்ன ரைம்மிற்கு வந்திடுறன் அண்ணா...அதொன்றும் பிரச்சினை இல்லை அண்ணா... நீங்க எதுவும் யோசிக்க வேண்டாம்... என்னட்டை விட்டிடுங்க.. சரி அண்ணா வைக்கிறன்...

'யார்ரா போனில, அண்ணா அண்ணா என்று உருகிற, உனக்குத்தான் அண்ணா இல்லையே.. எல்லாம் அக்காதானே!..' இது மோகன்

'எதுக்கெடுத்தாலும் என்னை விசாரிக்கிறதே உனக்குப் பிழைப்பாப் போச்சு, ஏன்டா எனக்குத் தெரிஞ்ச ... என்னைவிட இரண்டு வயசு மூத்தவங்களை அண்ணா என்டு சொல்லக்கூடாதா..? இது கண்ணன்

'எங்க வயசவிடப் பெரியவங்களோடையெல்லாம் பழக்கம் வைச்சிருக்கவேண்டாம் என்று எங்க

வீட்டில கண்டிசன் இருக்கு, உனக்கு அதெல்லாம் இல்லையா...?' இது மோகன்

'உன்னைப்போலயெல்லாம் நான் பயந்தாங் கொள்ளியில்ல... நீ என்னை விசாரிச்சதெல்லாம் போதும். நான் வீட்டுக்குப் போறன்... நீ வாறியா இல்லையா...?' வெயில் ஏறிக்கொண்டிருப்பதால் மோகனும் மாறனிடம் கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

ஐயா பச்சை ஒடியலைக் காயவைக்க படங்கை ஒரு கை பிடிக்குமாறு மாறனை அழைத்தார். மாறனும் உதவி செய்தான். அதன் பின் மாறன் 'ஐயா, அம்மாவுக்கு கடைத்தெருவுக்குப் போகவேண்டியதிருக்கும் என்ன ஏது என்று கேட்டு உதவி செய்துவிட்டு மதியச் சாப்பாட்டுடன் வருகிறேன்' என்று கூறி தன் வீட்டற்குப்பறப்படத் தயாரானான்.

அவன் காலையில் ஐயாவுக்கு உதவி செய்வான் மதியத்தில் அம்மாவுக்கு உதவி செய்வான் ஐயாவுக்கான மதிய உணவு, இரவு உணவு ஆகியவற்றையும் அவன் தான் வீட்டுக்குச் சென்று எடுத்துவருவான். பின்னேரம் ஆனதும் அக்காவை ரியூசன் கொண்டுபோய் விடுவதும் இப்போது அவன்தான். இரவுச் சாப்பாட்டுடன் மீண்டும் எட்டுமணியளவில் ஐயாவிடம் வந்துவிடுவது அவனது வழக்கம்.

தாத்தாவிடம் வீட்டுக்குப்போவதாகக் கூறி விட்டு தனது துவிச்சக்கர வண்டியை எடுக்கச்சென்ற மாறன், தனது துவிச்சக்கர வண்டிக்கு அருகில் நின்ற தாத்தாவின் துவிச்சக்கர வண்டியின் பின் பக்க சக்கரத்தின் ரியூப் காற்றிறங்கியிருப்பதை அவதானித்தான். 'என்னது இது... காலயிலே இந்த சக்கரம் நல்லாத்தானே இருந்தது. ஆம் தாத்தா முற்றம் பெருக்கும்பொழுது, இதை உருட்டி விடும் போது பார்த்தேன்.' தாத்தா இதை உருட்டிவிட்ட பொழுது பதிந்திருந்த அடையாளத்தையும் நோக்கினான் மாறன். 'நல்லாத்தான் இருக்கு... காலையிலே தாத்தா எங்கேயும் வண்டியில போகேல்ல... நேற்றே பிரச்சினையென்றால் விடியவே காத்து போயிருக்கவேணுமே. அப்படியானால், இது யாருடைய வேலை...' பாதணியின் அடையாளத்தை நோக்கினான். அது கண்ணனுடைய பாதணியின் அடையாளத்தை ஒத்ததாக இருந்தது. அப்போ... இது... கண்ணனுடையதா...? அவனுக்கு சந்தேகம் எழுந்தது... அதே நேரம் மனதில் படபடப்பும் எழுந்தது. 'ஏன் இவன் இப்படிப்பண்ணினான்..? ஒருவேளை தாத்தா இவனிடம் கதைத்தவை இவனுக்குப் பிடிக்கவில்லையோ...?

தன்னுடைய சைக்கிளை விட்டுவிட்டு தாத்தாவின் சைக்கிளை உருட்டிக்கொண்டு கிளம்பினான். துவிச்சக்கர வண்டியை இழுத்துக்கொண்டு கால்கள் கொஞ்சம் வேகமாகவே நடந்தன. முதலில்

## சிறுகதை

ஐயாவின் துவிச்சக்கர வண்டியை சரிபார்ப்பதற்கு கடைக்குச் செல்லவே நினைத்திருந்தான். ஆனாலும் அது சாதாரண சிறியதுளையாகவோ சிறிய ஒட்டாகவோ இருக்கும் போல் தெரியில்லை. சில வேளை புதிய ரியூப் வாங்கவேண்டி வந்தாலும் வரலாம் என்று எண்ணியவனுக்கு கண்ணன்மீது. கடுங் கோபம் ஏற்பட்டது. கட்டுப்படுத்தவே நினைத்தான் ஆனால் முடியவில்லை. ஏனெனில் மாறனது துவிச்சக்கர வண்டிக்கு ஏதேனும் செய்திருந்தால் அவனுக்கு இவ்வளவு கோபம் ஏற்பட்டிருக்காது. எவ்வளவு மூத்தவர் ஐயா, எல்லார் பிள்ளையையும் தன்பிள்ளையாக நினைத்து சரிபிழைக்கு சட்டென்று கடிந்துவிடுவார். இவர்மீதா இவனுக்கு இவ்வளவு கோபம். கடகடவென்று கடைக்கு நடந்து சென்று கொண்டிருந்தவன் வழியில் மைதானத்தில் யார்நிற்கிறார்கள் என்று நோட்டம் விட்டான் உதவிக்கு அழைத்துச் செல்வதற்காக.

கஷ்டகாலம் அங்கே வடலிநிழலில் கண்ணனும் இன்னொருவரும் இருந்தனர். தாண்டிப்போக மன சில்லை மாறனுக்கு. 'ஏண்டா இப்படிச்செய்தாய்? மண்டையிலே உறைக்கிறமாதிரி ஏதெண்டாலும் கேட்டு அவனுக்கு புத்திவாறமாதிரி செய்திட்டுப் போகவேணும் என்று விளையாட்டு மைதானத்துக்குள் நுழைந்தான். மதியப்பொழுது வெயில் தகித்துக்கொண்டிருந்ததாகையால் மைதானப்பக்கம் வேறு யாரையும் காணவில்லை. மாறன் வடலிநிழலில் இருந்த கண்ணனின் பக்கமாகச் சென்றுவிட்டான்.

'ஏண்டா கண்ணா உனக்கு மனசென்று ஒன்ற இருக்கா இப்படியா செய்வாய்?' என்றான் மாறன்.

பதிலுக்கு கண்ணன் 'ஏன் என்ன செய்தேன்' என்று பனைக்குற்றியில் இருந்தவாறே கேட்டான். 'என்ன தெரியாத மாதிரிக்கேட்கிறாய் ஐயாவின்ரை சைக்கிள் ரயருக்கு என்ன செய்தே நீ' என்றான் மாறன்

'நான் ஒன்டும் செய்யேல்லை.. தேவையில்லாமல் இதில நிண்டு கதைக்காமல் அங்காலே போ' என்று உரப்பினான் கண்ணன்.

ஒரு பெரிய மனிசரோட இப்படித்தான் நீ நடந்து கொள்ளுவியா... உன்னை என்ரை நண்பன் என்று சொல்லவே வெட்கமாக இருக்கு.. உன்னோடை எல்லாத்தையும் பிறகு தனியக் கதைக்கிறன்... என்றுசொல்லித் திரும்புவதற்கு முன் கண்ணனோடு நின்ற மற்றவன் 'என்ன பயமா இருக்கா....' என்று கூறிக்கொண்டு விட்டான் ஒருகுத்து மாறனின் மூக்கின் மேல். மாறன் நிலைகுலைந்து சுழன்றான். மாறனின்

கைகள் மண்வெட்டி பிடித்து பலமடைந்திருந்தாலும் அடித்தவன் பெரிய ஆள். சண்டித்தனம் செய்வதையே தொழிலாகக் கொண்டிருப்பான் போலும். மூக்குடைந்து இரத்தம் ஒழுகிய நிலையிலும் அடுத்த அடியை தடுக்கவே முனைந்தான் மாறன். இருந்தாலும் முடியவில்லை. நிலத்தில் கைகால்கள் அடிபட விழுந்து மேலும் காயங்களுற்றான்.

தண்ணீர் அள்ள அவ்வழியால் வந்த தாரணி நிலைமையைக் கண்டு அதிர்ந்து போய், தண்ணீர் ஏந்துவதற்காய் கொண்டுவந்த பாத்திரத்தை அப்படியே வைத்துவிட்டு சைக்கிளை உதைந்து கொண்டு மோகனிடம் விரைந்தாள்.

இருவரும் ஓடோடிவந்து பார்த்தபொழுது மூக்கிலிருந்து ஒழுகிய இரத்தம் மாறனின் முன்சட்டையை கறைப்படுத்தியிருக்க, முழங்கால், முழங்கை தேய்ந்து இரத்தம் கசிய சரியாக உக்காரமுடியாமல் தலையைக் குனிந்தவாறு வெயிலில் இருந்த மரக்குற்றியின் மீது அவ்விடத்திலே அமர்ந்திருந்தான் மாறன்.

அவனது கைகால்களை நீரினால் கழுவுதற்காக நீர்எடுப்பதற்காக விரைந்தாள் தாரணி அவள் விழிகள் ஈரமாவதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

மோகன் மாறனை நிழலுக்கு அழைத்துச் செல்ல முயற்சித்தான்... ஆனால், மாறன் எழுந்துகொள்ள தயாராக இல்லை... அவன் கண்கள் குளமாகியிருந்தது. மோகன் கூறினான் 'என்ன... தாத்தாவின் சைக்கிள் ரியூப்பை கிழித்துவிட்டானா? காலையிலேயே நான் கவனிச்சேன் கண்ணனுடைய வேலையை. அங்கே வச்சு தாத்தா முன்னாலே பிரச்சினையாக்கவேண்டாம் என்றுதான் உனக்கு சொல்லாமல் தவிர்த்தேன். அதுக்குள்ள இப்படியாகிப்போச்சு என்று மனம் வருந்தினான் மோகன்.

என் தாத்தா அப்படி என்னடா பேசிட்டார் அவனை...ஏன்டா இவன் இப்படி இருக்கிறான்... அந்த அண்ணை என்னை அடிக்கிறபொழுது தடுக்காமல் பார்த்துக்கொண்டு நின்றானடா... என்று மாறனின் குரல் விம்மியது. தாத்தா, அம்மா, அப்பா, கேட்டால் என்னடா சொல்லப்போறன்...எப்படி காயம் வந்தது என்டு என்னசொல்லுறதெண்டு சொல்லுறது... மனம் தளர்ந்து அழுதான் மாறன். அவனைத் தாங்கிப்பிடித்திருந்தான் மோகன்.

'நான் கண்ணிட்டை ஞாயத்தைக் கேட்டுக் கொண்டு நிக்கேக்கை அவர் ஏன் தேவையில்லாமல் திடீரென்று என்னைத் தாக்கினார் ? ஒண்டும் புரியேல்லை மோகன்... கண்ணன் எங்களோடை நட்பாயிருந்ததெல்லாம் பொய்யா...?' என்ற மனங்கலங்கினான் மாறன்.

'பொய்தான் மாறன். அவன்ரை நடவடிக்கை இப்ப சில நாட்களாக சரியில்லை... உன்னை அடித்தாரே அவரோடைதான் அவன் கடுஞ்சினேகிதம்...சில விசயங்களை நான் கவனிச்சனான். அதைப்பற்றி நான் அவனிட்டை ஏதும்கேட்கேல்லை. அதை வேறை சிலரும் கண்டிருக்கினம்...

மாறன் தலையை நிமிர்த்தி என்ன என்று கேட்டான். மோகன் சுற்றி வளைத்தான். ஸிஅவன்ரை போனைப் பார்த்தனிதானே எப்படி மொட்ஸ் என்று... கையில வோச்சை பார்த்தியா... என்ன பெறுமதியென்று... கழுத்தில சங்கிலி ... படிக்கிற மாணவன் மாதிரியா இருக்கிறான்? அவன்ரை பெற்றார் சரியான கஸ்ரத்திலதான் இருக்கினம். இவனுக்கு மட்டும் எப்படி கையில காசுபுரளுது? இவன் பிழையான கூட்டத்துக்குள்ள மாட்டீட்டான் என்றுதான் இரகசியமாக கதைபோகுது. அதுமட்டுமில்லை...

இவன் கதிர் சொன்னவன் கண்ணன் இந்தக் கூட்டாளியோட சேர்ந்துதான் அந்த போதையேற்றுகிற சுருட்டடிச்சு, தகப்பன் நல்லா சாத்துசாத்தென்று சாத்திப்போட்டுவிட்டதாம்... '

'ஏன் மோகன் இதையெல்லாம் முன்னமே கொஞ்சமாவது எனக்கும் தெரியப்படுத்தியிருக்கலாமே.. சற்று யாக்கிரதையாக இருந்திருக்கலாம்...'

'என்னத்தை யாக்கிரதையாக இருக்கிறது மாறன் அவங்கடை சண்டித்தனத்துக்கு முன்னால நாங்கள் ஒன்டுமே செய்யேலாது.' என்றான் மோகன்.

அப்படியென்றால் கண்ணனின் கதை முடிஞ்சுதா? இவ்வளவுதானா...? என்றான் மாறன் கவலையாக.

'கண்ணன் மட்டுமில்லை இது ஒரு தொற்றுப்போல தொடரப்போற கதைதான்... இன்னும் யாரார் பலியாகப் போறார்களோ தெரியேல்லை...'

இப்போதுதான் இந்தக் கதையை கேள்விப்பட்ட மாறனுக்கும் தாரணிக்கும் அதிர்ச்சி தாங்க முடியவில்லை. வெளியேற முடியாத முள்வேலிக்குள் அகப்பட்டுக் கொண்டோமோ என மனம் பதைபதைப்பானது.

இளையோராகிய தமக்கு முன்னால் இருக்கும் இப்படிப்பட்ட தடைகள் எல்லாம் எப்போ... எப்படி முறியடிக்கப்படப்போகிறதோ..? இந்தத் தளிர்களின் மனதில் தமது எதிர்காலம் பற்றி எண்ணமுடியாத கேள்விகள்...

பசும் புல்லையும், பூவையும், பூச்சி, புழுவையும் பறவைகள், விலங்குகளையும் நேசித்து இன்பங்கண்ட , இயற்கை வினோதங்களில் திளைத்துக்கொண்ட இந்த இளந்தளிர்கள் விருட்சமாகுமா? வீழ்ந்துபோகுமா?

காற்றிலாடும் இந்த இளந் தளிர்கள் துளிர்விடுமா இல்லை உடைந்துபோகுமா?

................

